**தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.கருணாநிதி அவர்கள், 2001–2002ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தை சட்டமன்றப் பேரவை முன் வைத்து, 2001ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29 ஆம் நாளன்று ஆற்றும் உரை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

இந்தியத் திருநாடு குடியரசுப் பொன்விழா நிறைவு ஆண்டினைக் கொண்டாடி உள்ள இவ்வேளையில் தமிழக அரசின் 2000–2001ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டையும் 2001–2002ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தையும் இப்பேரவைமுன் வைப்பதில் பெருமிதம் கொள்கிறேன். வரும் நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான செலவினங்களுக்கு மானிய அனுமதி இதன்மூலம் பெறப்படும். தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் புதிய சட்டப்பேரவையில் முழு அளவிலான வரவு–செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும்.

2. இந்த அரசு,

அருவினை யென்ப உளவோ கருவியாற்
கால மறிந்து செயின்

(தேவையான சாதனங்களுடன் உரிய நேரத்தையும் அறிந்து செயல்பட்டால் முடியாதவை என்று எவையுமே இல்லை)

எனும் அய்யன் திருவள்ளுவரின் அறிவுரையை அகத்தே பதித்து, தந்தை பெரியாரின் சமுதாயக் கண்ணோட்டம், பேரறிஞர் அண்ணா வகுத்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றிலிருந்து சிறிதும் பிறழாமல் மாற்றுக் கருத்துடையோரை மதித்தும் அவர்தம் ஏற்கத் தக்க கருத்துக்களை ஏற்றுக் கொண்டும் தன்னடக்கத்துடனும் தளரா உறுதியுடனும் மத நல்லிணக்கமும் மனித நேயமும் போற்றி மத சார்பற்ற நிலையில் தமிழுக்காகவும், தமிழ்நாட்டு மக்களுக்காகவும் பணியாற்றி வந்துள்ளது.

3. குடியரசு தினத்தை நாட்டுமக்கள் குதூகலத்துடன் விழா எடுத்துக் கொண்டாடிக் கொண்டிருந்த நாளில் இந்தியாவின் பல பகுதிகளில் நில நடுக்கம் தோன்றி குறிப்பாக குஜராத் மாநிலத்தில் பெரும்

சேதமும், பல்லாயிரக்கணக்கில் உயிரிழப்பும் ஏற்பட்டுள்ள கொடுமையான நிகழ்ச்சி உருவாகியுள்ளது. இது குறித்து தமிழக மக்களின் உருக்கமிகு இரங்கலைத் தெரிவிப்பதுடன் குஜராத் மாநில நிலநடுக்க விளைவுகளின் நிவாரணப் பணிகளுக்காக தமிழக அரசின் சார்பில் ஐந்து கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மருத்துவ உதவி, பொருள் உதவி ஆகிய அனைத்து உதவிகளையும் செய்ய இந்த அரசு முன்வந்துள்ளது. மேலும் தமிழக அரசு மூலமாக நிவாரண நிதி வழங்க விரும்புவோர் "குஜராத் நிலநடுக்க நிவாரண நிதி" (Gujarat Earthquake Relief Fund) என்ற பெயரில் சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள பொதுத்துறை செயலாளர் அவர்களுக்கு காசோலைகளாகவோ, வங்கி வரைவோலைகளாகவோ அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## *பொருளாதார வளர்ச்சி*

4. இந்த ஐந்தாண்டுகளில் இம்மாநிலம் வலுவான பொருளாதார நிலையை அடைவதற்கு "மனித நேயத்துடன் இணைந்த பொருளாதார வளர்ச்சி" (economic development with a human face) என்ற இந்த அரசின் கொள்கை காரணமாயிருந்துள்ளது. 1996–97ஆம் ஆண்டிற்கும் 1998–99 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், நிலையான விலைகளின் அடிப்படையில் (at constant prices) மாநிலத்தின் மொத்த உற்பத்தியின் (Gross State Domestic Product) வளர்ச்சி வீதம் சராசரியாக ஆண்டொன்றுக்கு 6.05 சதவீதமாக இருந்தது. இந்த அரசு எடுத்துள்ள பல நடவடிக்கைகளின் காரணமாக 1999–2000ஆம் ஆண்டில் இது 7.04 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி மிக உயர்ந்துள்ள மூன்று மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் விளங்குகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. இம்மாநிலத்தில் தனிநபர் வருமானம் 1995–96ல் ரூபாய் 11,894 ஆக இருந்து 1999–2000ஆம் ஆண்டில் ரூபாய் 18,786 ஆக அதிகரித்துள்ளது.

## *மத்திய–மாநில நிதி உறவுகள்*

6. பதினோராவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளால் தமிழகத்திற்கு பெருத்த நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. மத்திய அரசின் மொத்த வரி வசூலில் மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய பங்கை 40 சதவீதமாக நிர்ணயிக்கும்படி தமிழக அரசு கோரியிருந்தது. இதற்கு மாறாக பதினோராவது நிதி ஆணையம் நிகர வரி வசூலில் 29.5 சதவீதம் மட்டுமே பகிர்ந்தளிக்க வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. அத்துடன் அந்த நிதியையும் பகிர்ந்தளிப்பதற்கு பதினோராவது நிதி ஆணையம் நிர்ணயித்த வழிமுறைகளில்; பின்தங்கிவிட்ட மாநிலங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் தமிழகத்தைப் போன்று சிறப்பாகச் செயல்படும் மாநிலங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக 2000ஆம் ஆண்டிலிருந்து தொடங்கும் ஐந்தாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டிற்கு ஏற்படவுள்ள இழப்பு ரூபாய் 4711 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி ஆணையத்தின் பரிந்துரைகளால் பாதிக்கப்பட்ட மாநிலங்கள் 21–8–2000 ஆம் நாளன்று இந்த ஏற்றுக்கொள்ள இயலாத, சமநிலையற்ற நிலையைச் சீரமைக்குமாறு பிரதமரிடம் கோரிக்கை ஒன்றினைக் கொடுத்துள்ளன. சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு வழங்குவதற்கான ஊக்க நிதி ஒன்றையாவது ஏற்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளோம். பதினோராவது நிதி ஆணையம், அதன் துணை அறிக்கையில் அனைத்து மாநிலங்களுக்கும் மொத்த ஊக்க நிதியாக அடுத்த ஐந்தாண்டுகளுக்கு ரூபாய் 5304 கோடிதான் என பரிந்துரைத்துள்ளதும் அதிலும் மொத்தமாக ஐந்தாண்டுகளுக்கு தமிழகத்தின் பங்கு ரூபாய் 402 கோடி மட்டுமே என்று கூறியிருப்பதும் முனைப்பாக செயல்படும் மாநிலங்களுக்கு கடும் தண்டனையாக அமைந்துள்ளது.

## *உள்ளாட்சி மன்றங்கள்*

7. மாநில அரசின் பல்வேறு மானியங்கள், வரி வருவாய்ப் பங்கீடு மற்றும் திட்டங்களுக்கான ஒதுக்கீடு ஆகிய வகையில் 1995–96ல் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட நிதி

ரூபாய் 787 கோடியிலிருந்து கடந்த ஆண்டு ரூபாய் 1997 கோடியாக அதிகரித்து வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இது நடப்பு நிதியாண்டில் ரூபாய் 2401 கோடியாக உயருகிறது என்பதையும் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

8. இது தவிர, ஊரக அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியத்தின் (RIDF) மூலம் ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூபாய் 110 கோடி நிதி பெறும் வசதியும், நகர கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழ்நாடு நகர்ப்பகுதி இரண்டாவது மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (TNUDP-II) ரூபாய் 341 கோடியே 80 இலட்சம் நிதி பெறும் வசதியும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு செய்து தரப்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், நிதி நிறுவனங்களிடமிருந்தும் சந்தையிலிருந்தும் நிதியாதாரங்களைத் திரட்டுவதற்கும், நகர்ப்புற வசதிப் பணிகளில் தனியாரை ஈடுபடுத்துவதற்கும் வழிவகை செய்து விரிவான சட்டமொன்றை இந்த அரசு நிறைவேற்றியுள்ளது.

## ***நகர்ப் பகுதி வளர்ச்சி***

9. சென்னை மாநகராட்சியில் 732 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மொத்தம் ரூபாய் 55 கோடி செலவில் புதுப்பிக்கும் ஒரு பெருந்திட்டம் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மற்ற மாநகராட்சிகளிலும் நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் 2822 கி.மீ. நீளத்திற்குச் சாலைகள் மொத்தம் ரூபாய் 200 கோடி செலவில் மேம்படுத்தப்படுகின்றன. **மதுரை நகரைச் சுற்றியுள்ள ஆரச் சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்திடும் திட்டம் ரூபாய் 112 கோடி மதிப்பீட்டில் ஹட்கோ நிறுவன உதவியுடன் செயல்படுத்தப்படும்.**

10. **எண்ணூர் பகுதியில் கடல் அரிப்பைத் தடுக்கவும் சென்னை மற்றும் எண்ணூர் துறைமுகங்களை தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைக்கும் சாலையை மேம்படுத்தவும் தமிழக அரசு, தேசிய நெடுஞ்சாலைக் குழுமம் மற்றும் சென்னைத் துறைமுகம் ஆகிய மூன்றும் இணைந்து செயல்படுத்தும் திட்டம் ரூபாய் 150 கோடி செலவில் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.**

11. மத்திய மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் உதவியோடு சுமார் ரூபாய் 1700 கோடி செலவில் ஆளுநர் உரையில் அறிவித்தவாறு காவிரி, வைகை, தாமிரபரணி ஆகிய நதிகளைத் தூய்மைப்படுத்தி சுற்றுச் சூழலை பாதுகாக்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையின் ஒப்புதல் கிடைத்துவிட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

12. சேலம் திருமணிமுத்தாறு சீரமைப்புடன் புறவழிச்சாலை அமைக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்து இப்பணி நடைபெற்று வருகிறது. இதற்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கப்படும்.

13. கடந்த நான்கு ஆண்டுகளில் 140 நகரங்களில் குடிநீர் வழங்கல் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் மேலும் 62 நகரங்களில் முடிக்கப்பட உள்ளன. 248 நகரங்களில் ரூபாய் 772 கோடி செலவில் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெறுகின்றன.

## ***ஊரக வளர்ச்சியும் வேலைவாய்ப்பும்***

14. **மக்களின் பேராதரவைப் பெற்றுள்ள திட்டங்களான நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம், உழவர் சந்தை, வருமுன் காப்போம் திட்டம், கால்நடை பாதுகாப்புத் திட்டம், ஊரகச் சாலை மேம்பாட்டுத் திட்டம், கிராமத் தெருக்களை சிமெண்ட் கான்கிரீட் தெருக்களாக மாற்றியமைக்கும் திட்டம், மாணவருக்கான கணினிக் கல்வித் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்கள் தொடர்ந்து முனைப்புடன் செயல்படுத்தப்படும்.**

15. இந்த நாலரை ஆண்டுகளில் 7,038 தொடக்கப்பள்ளிகள், 1,323 உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகள், 8,258 நியாய விலைக் கடைகள், 327 பால் கூட்டுறவு சங்கங்கள், 1,592 சத்துணவுக் கூடங்கள், 613 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 400 துணை சுகாதார நிலையங்கள் மற்றும் 812 ஊராட்சி அலுவலகங்கள் ஆகியவற்றிற்கான கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

16. இதுவரை எந்த அரசும் செய்யாத வகையில் கிராமப்புற ஏழைகளுக்கு இந்த நாலரை ஆண்டுகளில், ரூபாய் 843 கோடி செலவில் 2,91,551 கான்கிரீட் வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு 2,60,654 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

17. இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை 27,274 ஊரகக் குடியிருப்புகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்தை நிறைவேற்றியுள்ளது. **மீதமுள்ள 4202 குடியிருப்புகளுக்கும் வரும் நிதியாண்டில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.**

18. **அவினாசி–அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்திற்கான கலந்தாளுநர் (Consultant) பரிந்துரை பெறப்பட்டுள்ளது. அதனைப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ள வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கையை விரைவில் பெற்று நிதி ஒதுக்கி நடவடிக்கை எடுக்கப்படும்.**

## *பொது விநியோக முறை*

19. இன்றியமையாப் பொருட்களின் பொது விநியோகத் திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் அரசு மானியமாக ரூபாய் 1700 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இந்த ஒதுக்கீடு ரூபாய் 1870 கோடியாக அதிகரிக்கும்.

20. இந்த நாலரை ஆண்டுகளில் 2816 முழுநேர நியாய விலைக் கடைகளும், 2475 பகுதிநேர நியாய விலைக் கடைகளுமாக மொத்தம் 5291 நியாய விலைக் கடைகள் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ளன.

21. மத்திய அரசு மண்ணெண்ணெய்க்கு நிர்ணயித்த விற்பனை விலையைவிட லிட்டர் ஒன்றுக்கு 60 காசுகள் குறைத்து, 1–1–2001 முதல் விற்பதற்கு இவ்வரசு ஆணை பிறப்பித்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

## *வேளாண்மை*

22. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்தவாறு விவசாயிகளின் கடன்மீதான அபராத வட்டி ரூபாய் 13 கோடியே 20 இலட்சம் தள்ளுபடி செய்யப்பட்டதன்மூலம் 3,40,727 விவசாயிகள் பயன் அடைந்தனர். **இதே அடிப்படையில் 30–6–2000வரை தவணை தவறிய விவசாயக் கடன்களுக்கு 30–6–2001க்குள் வட்டியுடன் கடனைச் செலுத்தும் அனைத்து விவசாயிகளுக்கும் 3 சதவீதமாகவுள்ள அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும்.**

23. சென்ற ஆண்டு உரிய காலத்தில் கடனை திருப்பிச் செலுத்திய 2,47,023 விவசாயிகளுக்கு ரூபாய் 21 கோடியே 63 இலட்சம் வட்டி ஊக்குவிப்புத்தொகை அரசால் வழங்கப்பட்டது. **நடப்பு ஆண்டிலும் தவணை தவறாமல் திருப்பிச் செலுத்தப்படும் கடன்தொகைக்கு கடந்த ஆண்டில் வழங்கியதுபோல் வட்டியில் 7 சதவீதம் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படும். நடப்பாண்டில் ஏற்கனவே முழுக்கடன் பாக்கியை செலுத்தியவர்களுக்கும் இது பொருந்தும். இதனால் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன் பெறுவார்கள்.**

24. கூட்டுறவு வங்கிகளிடம் பெறுகின்ற பயிர்க்கடனை, குறித்த தவணைக்குள் திருப்பிச் செலுத்தாத விவசாயிகளிடம் தற்போது அபராத வட்டியாக 3 சதவீதம் வசூலிக்கப்படுகிறது. இந்த வட்டியைக் குறைக்க வேண்டுமென விவசாயிகள் கோரி வருகின்றனர். **இக்கோரிக்கையை ஏற்று கூட்டுறவு வங்கிகள் 1–7–2000லிருந்து தவணை தவறிய கடன் மீதான அபராத வட்டியை 3 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாகக் குறைத்திட முன்வந்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே வரும் ஆண்டுகளில் கூட்டுறவு பயிர்க் கடன் மீதான அபராத வட்டி 1 சதவீதம் மட்டுமே இருக்கும்.**

25. பரம்பிக்குளம்–ஆளியாறு பாசனத் திட்டப் பகுதியில் விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று மடை விட்டு மடை பாயும் பாசன முறை நடப்பாண்டில் செயல்படுத்தப்பட்டது.

26. விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக விதிக்கப்பட்டுவந்த பாதைக் கட்டணம் (Track Rent) ரத்து செய்யப்பட்டது.

27. கீழ்பவானி பாசன திட்ட ஆயக்கட்டு நில விவசாயிகளின் இடர்களைக் களைவதற்கு, பயிர் வாரித் தண்ணீர் தீர்வை விதிப்பதற்குப் பதிலாக ஏக்கர் வாரியாக, ஒரே வீதத்தில் தண்ணீர் தீர்வை விதிக்கும் முறை கொண்டுவரப்பட்டுள்ளது. அவர்கள் செலுத்த வேண்டிய தண்ணீர் தண்டத் தீர்வை நிலுவைகளும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

28. இவை தவிர, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் வேளாண்மை விற்பனை குறித்து நடைமுறையில் உள்ள சில சிக்கல்களை ஆராய்ந்து எளிமைப்படுத்த வேளாண்மைச் செயலர் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழு சென்ற ஆண்டு அமைக்கப்பட்டு இக்குழு தனது அறிக்கையை 8–1–2001 அன்று அளித்தது. குழுவின் பரிந்துரைகள்மீது பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன:–

- **ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விளை பொருள்களைக் கொண்டுவரும் விவசாயிகளுக்குச் சேர வேண்டிய முழுத் தொகையை அன்றே பட்டுவாடா செய்ய வழிவகைகள் வகுக்கப்படும்.**
- **விவசாயிகள் எடுத்துச் செல்லும் விளைபொருள்களுக்கு விற்பனைக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்பட மாட்டாது.**
- **அறுவடை காலங்களில் முக்கிய இடங்களில் தற்காலிக விற்பனை மையங்கள் ஏற்படுத்தப்படும். தேவைப்படும் இடங்களில் குளிர்பதன கிடங்குகள் ஏற்படுத்தவும், வெங்காயம், வாழை, தக்காளி போன்ற விளைபொருட்களுக்குத் தனித்தனியாக அவை உற்பத்தியாகும் இடங்களில் விற்பனைக் கூடங்கள் மற்றும் சேமிப்புக் கிடங்குகள் அமைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படும்.**
- **ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விளைபொருள் வரத்தைப் பொறுத்து சுமார் 20 முதல் 200 ஏக்கர் நிலப்பரப்பில் கடைகள், கிட்டங்கிகள், உலர் களங்கள், தரம்**

**பிரிப்பு மையங்கள், பரிவர்த்தனைக் கூடங்கள், ஓய்வு விடுதிகள் போன்ற வசதிகளுடன் கூடிய வளாகங்கள் அமைக்கப்படும்.**

- **அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிக்குள் கொண்டுவருகிற, அறிவிக்கை செய்யப்பட்ட விளைபொருள்களை உருமாற்றம் செய்தோ அல்லது செய்யாமலோ மாநிலத்திற்கு வெளியே 60 நாட்களுக்குள் விற்றாலோ, அனுப்பினாலோ, அல்லது விளைபொருள்களை அனுப்பியவர்களுக்கே திருப்பி அனுப்பினாலோ அதற்கு விற்பனைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. இதற்கான சட்டத் திருத்தம் கொண்டுவரப்படும்.**

## ***பாசனம்***

29. போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாததால் தேங்கிக் கிடந்த 9 நீர்த்தேக்கத் திட்டங்களுக்கு இந்த அரசு பொறுப்பேற்றபிறகு தேவையான நிதி ஒதுக்கி பணிகளை முடுக்கிவிட்டதன் விளைவாக, மோர்தானா, நம்பியாறு, பொய்கையாறு, இராஜா தோப்புக்காணாறு ஆகிய நான்கு நீர்த்தேக்கத் திட்டங்கள் நடப்பாண்டில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டமும் நடப்பு ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும். மீதமுள்ள அடவிநயினார் கோவில், கொடுமுடியாறு, வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கங்களும் கிருதமால் அணைக்கட்டும் வரும் நிதியாண்டில் முடிக்கப்பட்டுவிடும். தூத்துக்குடி மாவட்டம் சடையனேரி கால்வாய்த் திட்டம் நடப்பாண்டில் முடிவடையும்.

30. இந்த அரசு 1997 முதல் செயல்படுத்திவரும் ஆறுகள், கால்வாய்கள், ஏரிகள், வடிகால்களில் தூர்வாரும் பணிகள், விவசாயிகளிடம் பெற்ற பெரும் வரவேற்பினைக் கருதி, தொடர்ந்து செயல்படுத்தப்படும். **ரூபாய் 106 கோடியே 26 இலட்சம் செலவில் பாலாறு, தாமிரபரணி மற்றும் வைகை ஆகிய நதிகளின் வடிநிலங்களில் உள்ள 620 கண்மாய்களைப் புதுப்பிக்கும் பணிக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.**

## ***சாலைகள் மற்றும் பாலங்கள்***

31. கிராமங்களை முக்கிய சாலைகளோடு இணைக்கும் இந்த அரசின் திட்டத்தின்கீழ் 500க்கு மேல் மக்கட்தொகையுள்ள இணைப்புச் சாலை வசதி இல்லாத 480 கிராமங்களுக்கு கடந்த இரு ஆண்டுகளில் ரூபாய் 214 கோடி செலவில் சாலை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. **வரும் நிதி ஆண்டில், மேலும் 160 கிராமங்களுக்கு ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் இணைப்புச் சாலை வசதி செய்து தரப்படும்.**

32. சாலை வசதிகளை மேம்படுத்த இந்த அரசு தனது நிதி ஆதாரங்களோடு கூடுதலாக நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. 1996–97 முதல் 21,624 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் மேம்படுத்தும் பணிகள் ரூபாய் 1650 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு 14,696 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ரூபாய் 1185 கோடி செலவில் 601 பாலங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 325 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

33. **நாமக்கல்–கரூர் மாவட்டங்களை இணைக்கும் வகையில் மோகனூர்–வாங்கல் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம் ஒன்றும், ஈரோடு–நாமக்கல் மாவட்டங்களை இணைக்கும் வகையில் மொடக்குறிச்சி ஒன்றியம் லக்காபுரம் பரிசல் துறைக்கும் திருச்செங்கோடு கொக்கராயன்பேட்டைக்கும் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம் ஒன்றும் கட்டப்படும்.**

34. **தேனி மாவட்டத்தில் உள்ள கடமலைக்குண்டு முதல் கோரையூத்து வரை 14 கிராமங்களுக்கு பயன்படக்கூடிய 18 கி.மீ. நீளமுள்ள சாலையை சுமார் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத்துறை மூலம் பழுதுபார்ப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கி பணி தொடங்கப்படும்.**

35. **கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் துறைமுகத்தை மலேசிய அரசின் உதவியுடன் உலகத்தரம் வாய்ந்த**

**பெரும் துறைமுகமாக உருவாக்கும் சாத்தியக் கூறுகளை ஆராயவும் அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவும் இந்த அரசு மலேசிய அரசுடன் ஒப்பந்தம் ஒன்றில் விரைவில் கையெழுத்திடவுள்ளது.**

## *போக்குவரத்து*

36. அரசுப் போக்குவரத்து கழகங்கள் 1996 முதல் இதுவரை 9923 புதிய பேருந்துகளை வாங்கியுள்ளன. இக்காலகட்டத்தில் 1474 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன.

37. இந்தியாவில் எல்லா மாநிலங்களையும்விட தமிழ்நாட்டில்தான் பேருந்துக் கட்டணம் குறைவாக உள்ளது.

38. கிராமங்களுக்கு போக்குவரத்து வசதியை வழங்கிட சிற்றுந்து (Mini-bus) திட்டத்தை 1997–98ல் அறிமுகப்படுத்தி, தற்போது 3030 சிற்றுந்துகள் இயங்கிவருகின்றன. **இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படும்.**

## *மின் சக்தி*

39. வரும் ஆறு மாதங்களுக்குள் 547 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட புதிய மின் திட்டங்கள் செயல்படவுள்ளன. இதன்மூலம் தமிழகம் தன்னிறைவு பெற்று மின்வெட்டு தவிர்க்கப்படும். **விவசாயத்திற்கான மின்சாரம் பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் தடையின்றி அளிக்கப்படும்.**

40. "ஒரே நாளில் மின் இணைப்பு" என்ற புதிய திட்டத்தை தமிழ்நாட்டிலுள்ள பயனீட்டாளர்களின் நலன் கருதி 1–4–2000 அன்று தொடங்கி இதுவரை சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

## ***தொழில் வளர்ச்சி***

41. தரமணியில் ரூபாய் 338 கோடி செலவில் 12 இலட்சம் சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள உலகத்தரம் வாய்ந்த கணினி மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா (டைடல் பூங்கா) பெற்றுள்ள வரவேற்பை அடுத்து, **20 இலட்சம் சதுர அடி பரப்பளவில் இரண்டாவது கணினி மென்பொருள் பூங்கா அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.**

42. **நாங்குநேரியில் சர்வதேச தரம் வாய்ந்த உயர் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை அமெரிக்க தொழில்முனைவோருடன் இணைந்து டிட்கோ நிறுவனம் உருவாக்க உள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்னும் சில நாட்களில் நடைபெற இருக்கிறது. இப்பகுதியில் ஏற்றுமதியை ஊக்குவிக்க மத்திய அரசின் வர்த்தக அமைச்சகம் இதை சிறப்புப் பொருளாதாரப் பகுதியாக (Special Economic Zone) அறிவித்துள்ளது.**

43. **இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனமும் டிட்கோ நிறுவனமும் இணைந்து சென்னை, நந்தம்பாக்கத்தில் அமைத்துள்ள வர்த்தக மையம் நாளை மறுநாள் திறக்கப்படவுள்ளது. இந்த இடத்தில் முதல் பொருட்காட்சியாக "இந்திய பன்னாட்டு தோல் வர்த்தக பொருட்காட்சி–2001" நடைபெறும்.**

44. தமிழகத்தின் வளர்ந்துவரும் தொழில் மற்றும் வர்த்தகத்தைக் கருத்தில்கொண்டு, சென்னையில் புதிய பன்னாட்டு விமான நிலையம் ஒன்றினை அமைக்க மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம். மத்திய அரசு விரைவில் ஒப்புதல் அளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

## ***தகவல் தொழில்நுட்பம்***

45. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழகம் முன்னணியில் உள்ளது. சென்னை தரமணிக்கும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள

திருப்போரூருக்கும் இடையே உள்ள பழைய மாமல்லபுரம் சாலை தகவல் தொழில்நுட்ப நெடுஞ்சாலையாக (IT Highway) உருவாகி வருகிறது. இப்பகுதியிலுள்ள நிறுவனங்களுக்குத் தேவையான மின் வசதி, சாலை வசதி, போக்குவரத்து வசதி, குடிநீர் வசதி ஆகிய கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## *உயிரியல் தொழில்நுட்பம்*

46. இந்த அரசு அறிவித்த உயிரியல் தொழில்நுட்பக் கொள்கையை செயல்படுத்திட டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையிலான மாநில உயிரியல் தொழில்நுட்ப வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் உயிரியல் தொடர்புடைய தொழில்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக, புதிய "வளர் தொழில்நுட்ப ஊக்க நிதி" (Emerging Technologies Fund) ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

## *கல்வி*

47. நடப்பு நிதியாண்டில் கல்விக்கான மொத்த ஒதுக்கீடு ரூபாய் 4949 கோடியிலிருந்து வரும் நிதியாண்டில் ரூபாய் 5472 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

48. இந்த அரசு நாலரை ஆண்டுகளில் 1039 தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கியுள்ளது. 512 தொடக்கப் பள்ளிகளை இடைநிலைப் பள்ளிகளாகவும், 380 இடைநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 283 உயர்நிலைப் பள்ளிகளை மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தியுள்ளது. 662 பள்ளிகளில் ரூபாய் 39 கோடியே 10 இலட்சம் செலவில் ஆய்வுக்கூடக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1544 பள்ளிகளுக்கு ரூபாய் 7 கோடி செலவில் ஆய்வுக்கூடச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

49. **வேளாண்மைக் கல்லூரியில் சேர முனையும் மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பாக, பள்ளிக் கல்வியில் ஒரு பாடமாக**

**சேர்க்கப்பட்டுள்ள வேளாண்மை கல்விப் பயிற்சி 100 பள்ளிகளில் செம்மையாகச் செயல்பட ஆவன செய்யப்படும்.**

50. டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் பள்ளிச் சிறார்களுக்கு பயனளிக்கின்ற வகையில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. சத்துணவுத் திட்டங்களுக்கு, வரும் நிதியாண்டில் ரூபாய் 580 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## *இளைஞர் நலன்*

51. கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில், இளைஞர்களுக்கு விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் பொழுதுபோக்குக்கான வசதிகளை அளிக்க ஊராட்சிகளிலும் நகர்ப்பகுதிகளிலும் விளையாட்டு மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருந்ததைத் தொடர்ந்து, இதுவரை 7000 இடங்களில் இத்தகைய மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. **இத்திட்டம் அனைத்து பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.**

52. இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு நிதி நிறுவனம் அமைப்பது குறித்து ஆராய்ந்து, பரிந்துரைகள் அளிக்க மாநில திட்டக்குழு உறுப்பினர் திரு. வெங்கிடரமணன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையை அளித்துள்ளது. **இதன் பரிந்துரைகளை ஏற்று மாநிலத்தில் பல துறைகள், நிதி நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டுவரும் சுய வேலைவாய்ப்புத் திட்டங்களை ஒருங்கிணைத்து முனைப்புடன் செயல்படுத்த 'தமிழ்நாடு சுய வேலைவாய்ப்பு ஊக்குவிக்கும் மையம்' (Tamil Nadu Centre for Self Employment Promotion) ஒன்றினை உருவாக்க அரசு முடிவு எடுத்துள்ளது.**

## *தமிழ் மொழியும் பண்பாடும்*

53. தமிழ் இலக்கிய சங்கப்பலகை குறள்பீடம் அமைக்கப்பட்டு தமிழறிஞர் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் அவர்களுக்கு முதல் குறள்பீட விருது வழங்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய 5 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட 16 நூல்கள் மற்றும் சிறுகதைகள் இச்சங்கப் பலகை மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

54. பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்களது நூல்களை நாட்டுடமையாக்கி அவருடைய குடும்பத்தினருக்கு பரிவுத் தொகையாக ரூபாய் 10 இலட்சம் வழங்கப்பட்டது.

55. **மயிலாடுதுறை விசுவநாத சாஸ்திரியார் உருவாக்கிய திருக்குறள் மதுர கீர்த்தனை பழைய பிரதி ஒன்றினை இசைமேதை செம்மங்குடி அவர்கள் என்னிடம் அளித்து அதனை புதிதாக வெளியிட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதனையேற்று முதல் பகுதி, இந்த அரசினால் கடந்த திங்கள் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தொடர்ந்து திருக்குறள் மதுர கீர்த்தனையின் மற்ற இரு பகுதிகளை வெளியிடவும், சாஸ்திரியாரின் இசைப்படைப்புகளை பொது மக்களிடையே பரப்பிடவும் ஐந்து இலட்சம் ரூபாய் மானியமாகத் தரவேண்டுமென்று அரசுக்கு வைக்கப்பட்டுள்ள கோரிக்கை ஏற்கப்படுகிறது.**

56. தமிழ் வளர்த்த சான்றோர், நாட்டுக்குழைத்த நல்லோர், தியாகச் செம்மல்கள் ஆகியோர்தம் நினைவைப் போற்றிப் பரப்பி வருவதை மன நிறைவளித்திடும் கடமைகளில் ஒன்றாகக் கருதும் இந்த அரசு 1996க்கு பின்னர் அய்யன் திருவள்ளுவருக்கு வானுயரச் சிலை, அண்ணல் அம்பேத்கர் மணி மண்டபம், தியாகிகள் மணி மண்டபம், ஜீவா மணி மண்டபம், தியாகி விசுவநாததாஸ் நினைவு இல்லம், மாவீரன் பூலித்தேவன் நினைவு மண்டபம், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் நினைவு மண்டபம், பெருந்தலைவர் காமராஜர் மணி மண்டபம், பெரியவர் பக்தவச்சலம் மணி மண்டபம், உடுமலை நாராயணக் கவி

மணி மண்டபம், மருது பாண்டியர் நினைவிடம், மொழிப்போர் தியாகிகள் மணி மண்டபம், தியாகசீலர் கக்கன் மணி மண்டபம், தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு மண்டபம், தீரன் சுந்தரலிங்கம் நகர் போன்றவைகளை அமைத்துள்ளதைத் தொடர்ந்து **சென்னையில் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுக்கு மணி மண்டபமும், தூத்துக்குடி மாவட்டம் கட்டாரங்குளத்தில் வீரன் அழகுமுத்துக்கோன் மணி மண்டபமும் கட்டப்படவுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்.**

57. தொல்பழங்காலந்தொட்டு தமிழ்நாட்டின் வரலாற்றை 8 தொகுதிகளில் தொகுத்து வெளியிட முடிவு செய்யப்பட்டு, இதுவரையிலும், 5 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒன்று அச்சில் உள்ளது. இன்னும் இரண்டு தொகுதிகள் வெளியிடப்பட உள்ளன.

## ***மக்கள் நல்வாழ்வு–குடும்ப நலன்***

58. 1995–96 ஆம் ஆண்டில் ரூபாய் 689 கோடியாக இருந்த மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான ஒதுக்கீடு படிப்படியாக உயர்த்தப்பட்டு, வரும் நிதியாண்டில் ரூபாய் 1311 கோடியாக உயர்ந்துள்ளது.

59. இளம்பிள்ளைவாத நோயை இம்மாநிலத்திலிருந்து முற்றிலும் அகற்றிட வேண்டும் என்ற இந்த அரசின் தீவிர முயற்சியின் பயனாக இந்நோய் அறவே தலைகாட்டாவண்ணம் போலியோ சொட்டு மருந்து போடும் பணி வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

60. பள்ளி செல்லும் சிறார்களின் உடல்வளத்தைப் பேணிக் காக்கும் பொருட்டு, அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் வாழ்வொளித் திட்டம் இந்த அரசால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு இதுவரையில் சுமார் 60 இலட்சம் சிறார்களின் உடல்நிலை பரிசோதிக்கப்பட்டு, 34 இலட்சம் பேருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. பார்வைக் கோளாறு உள்ள மாணவர்களுக்கு இலவசக் கண்ணாடியும் வழங்கப்பட்டுள்ளது.

## *வாழ்ந்து காட்டுவோம்*

**61.** மகளிருக்கு சுயவேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிகளை அளிப்பதன்மூலம் அவர்கள் சமூக–பொருளாதார உரிமைகளைப் பெறும் வகையில் இந்த அரசால் **1989–90** ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட மகளிர் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட **58,391** சுய உதவிக் குழுக்கள் இதுவரை ரூபாய் **64** கோடிக்குமேல் சேமித்ததுடன் வங்கிகள் மூலமாக ரூபாய் **131** கோடியே **12** இலட்சம் கடனுதவியும் பெற்றுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**62.** வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் கூட்டுறவு வங்கி மூலம் சமையல் எரிவாயு அடுப்பு மற்றும் சிலிண்டர் வாங்குவதற்காக கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **இத்திட்டம் பெற்றுள்ள வரவேற்பையொட்டி, மற்ற மாவட்டங்களிலும் இத்திட்டத்தை செயல்படுத்த கூட்டுறவு வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.**

## *ஆதிதிராவிடர்–பழங்குடியினர் நலன்*

**63.** ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலனுக்காக **1995–96** ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் **194** கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு நடப்பு நிதியாண்டில் ரூபாய் **626** கோடியாக உயர்ந்துள்ளது.

**64.** **1996–97** ஆம் ஆண்டிலிருந்து, **85** ஆதிதிராவிடர் நல உயர்நிலை/மேனிலைப் பள்ளிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆதிராவிட இளைஞர்களுக்கு, வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட கணினி, தட்டச்சு, பிளாஸ்டிக் மற்றும் ஆடை வடிவமைப்புத் தொழில் நுட்பவியல் போன்ற துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

**65.** பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு, மூன்றாம் வகுப்பு முதல் **5**ஆம் வகுப்பு வரை தொடர்ந்து கல்வி பயிலும் ஆதிதிராவிட/பழங்குடியினர் மாணவிகள் **60,000** பேருக்கு ஒவ்வொரு

ஆண்டும் தலா ரூபாய் 500 வீதமும், 6 ஆம் வகுப்பில் கல்வி பயிலும் 30,000 மாணவிகளுக்கு ஆண்டுக்கு தலா ரூபாய் 1000 வீதமும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தை செயல்படுத்த ரூபாய் 6 கோடி செலவிடப்படும்.

66. இந்த நாலரை ஆண்டுகளில் ஆதிதிராவிடர்/ பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ், ரூபாய் 65 கோடியே 73 இலட்சம் மதிப்பில் 3 இலட்சத்து ஏழாயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

67. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்தவாறு பழங்குடியினர் நலனுக்காக ஓர் தனி இயக்ககம் அமைக்கப்பட்டு செயல்பட்டுவருகிறது.

## *பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்*

68. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் நலனுக்காக 1995–96 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 47 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு நடப்பு நிதியாண்டில் ரூபாய் 175 கோடியாக உயர்ந்துள்ளது.

69. 1998 ஆம் ஆண்டிலிருந்து, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் குடும்பங்களிலிருந்து முதலாவதாகக் கல்வி கற்கின்ற மாணவருக்கு பல்தொழில் பயிற்சிப் பயிலகங்களில் (Polytechnic) பட்டயக்கல்வி இலவசமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது.

70. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினரைச் சேர்ந்த மாணவர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் சம அளவில் செலவுப் பொறுப்பேற்கும் வகையில் ரூபாய் 8 கோடியே 27 இலட்சம் செலவில் 21 மாணவரில்லக் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

71. 1999–2000 ஆம் ஆண்டு முதல் ரூபாய் 6 கோடி செலவில் 3ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 60,000 மாணவிகளுக்கு ஆண்டுதோறும் தலா ரூபாய் 500 ம், 6ஆம் வகுப்பு பயிலுகின்ற 30,000 மாணவிகளுக்கு ஆண்டுதோறும் தலா ரூபாய் 1000 ம் சிறப்பு ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

72. இந்த அரசு அண்மையில் அமைத்துள்ள உருது அகாடமி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை தலைவராகவும், டாக்டர் சையது சஃபியுல்லா அவர்களை துணைத் தலைவராகவும் கொண்டு 21 உறுப்பினர்களுடன் பணியைத் தொடங்கி இதுவரையில் மூன்று கூட்டங்களை நடத்தியுள்ளதோடு கவி சம்மேளனம், கருத்தரங்கம் போன்ற எதிர்கால நடவடிக்கைக்கான செயல்திட்டங்களையும் வகுத்துள்ளது.

73. மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் மிகுந்த அக்கறையுள்ள இந்த அரசு, மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்டு அதன் காரணமாக தீவிர மத வெறியர்களால் கொல்லப்பட்ட கோயம்புத்தூர் கோட்டை அமீர் அவர்களை பெருமைப்படுத்த அவரது பெயரால் குடியரசு தின விழா அன்று விருது வழங்க முடிவெடுத்து இந்த ஆண்டு முதலாவதாக தஞ்சை சுல்தான் அவர்களுக்கு வழங்கப்பட்டது. **அத்துடன் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்று அமீர் அவர்களது துணைவியாருக்கு மாதாந்திர ஓய்வூதியமும் அவரது மகளுக்கு அரசுப் பணியும் அவரது குடும்பத்தாருக்கு கோவையில் இலவசமாக வீடும் வழங்கப்படும்.**

## *சமூகப் பாதுகாப்பு*

74. அரசுக்குத் தேவைப்படாத புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி அனுபவித்து வருகின்ற நபர்களுக்கு அந்த வீட்டுமனைகள் சொந்தமாக்கப்படும் என்று கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததையொட்டி 15–1–2001 வரை 1,75,257 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

75. இந்த நாலரை ஆண்டுகளில் 56,154 நிலமற்ற ஏழைகளுக்கு 37,905 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டது. அதில் 14,689 பேர் ஆதிதிராவிடர் வகுப்பையும் 591 பேர் பழங்குடியினர் வகுப்பையும் சேர்ந்தவர்களாவர்.

76. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வயதின் அடிப்படையில் மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஆதரவற்ற மகளிர், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு வழங்கிவந்த மாதாந்திர உதவித்தொகையை, இந்த அரசு ரூபாய் 100 லிருந்து ரூபாய் 200 ஆக அதிகரித்துள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட பயன்பெறுவோர் எண்ணிக்கை வரையறையும் நீக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவோர் எண்ணிக்கை நடப்பு ஆண்டில் 10 இலட்சத்து 44 ஆயிரமாக உள்ளது. மொத்த உதவித் தொகை 1995–96ல் ரூபாய் 65 கோடியாக இருந்தது நடப்பு ஆண்டில் ரூபாய் 248 கோடியாக உயர்ந்துள்ளது.

77. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உறுதியளித்தவாறு ஊனமுற்ற 300 பேருக்கு 6 மையங்களில் இலவச கணினி கல்வி கற்பிக்கப்படுகிறது. மேலும் மருத்துவ ஆய்வுக்கூடத் தொழில்நுட்பம், இதயத் துடிப்பை அளவிடுதல், எக்ஸ் கதிர் படமெடுத்தல் ஆகியவற்றிலும் 300 ஊனமுற்றவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

## *நெசவாளர் நலன்*

78. நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கும், நகர்ப் பகுதிகளிலுள்ள ஏழைகளுக்கும் இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், அத்துடன் நெசவாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, இந்த ஆண்டு பொங்கல் திருநாளின்போது, ரூபாய் 110 கோடி மதிப்புள்ள சுமார் 81 இலட்சம் சேலைகளும், 74 இலட்சம் வேட்டிகளும் வழங்கப்பட்டன.

79. நடப்பாண்டில் ரூபாய் 70 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. நெசவாளர்களின் வாரிசுகளுக்கு தேசிய ஆடை வடிவமைப்பு பயிற்சி நிறுவனம் (NIFT) மூலம், பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

80. இந்த நாலரை ஆண்டுகளில் கைத்தறி நெசவாளர்களுக்கான ஈட்டுறுதி காப்புத்தொகை ரூபாய் 15,000லிருந்து ரூபாய் 50,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்கான முதியோர் உதவித்தொகையும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100 லிருந்து ரூபாய் 200 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது, இத்திட்டத்தின்கீழ் 7515 நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

81. கைத்தறித் துணி விற்பனைக்கு ஓராண்டில் 100 நாட்களுக்கு மட்டுமே தள்ளுபடி அனுமதிக்கப்பட்டு வந்த நிலையை மாற்றி, இந்த அரசு, ஆண்டு முழுவதும் 20 சதவீத தள்ளுபடி வழங்கி வருகிறது. நடப்பு ஆண்டில் பொங்கல் பண்டிகையையொட்டி, 30 சதவீதம் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டது. தள்ளுபடி உதவித் தொகையாக நடப்பாண்டில் ரூபாய் 69 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## *வணிகர் நலன்*

82. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வணிக வரி தொடர்பாக இருந்த பல நடைமுறை சிரமங்களை போக்கும் வகையில் அறிவிக்கப்பட்ட முடிவுகள் வணிகர்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளன. குறிப்பாக சுயவரி விதிப்பிற்கான வியாபார உச்சவரம்பு ரூபாய் 20 இலட்சத்திலிருந்து ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தப்பட்டதானது ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட வணிகர்களுக்கு பயனளித்துள்ளது.

83. 1989ஆம் ஆண்டில் இவ்வரசால் உருவாக்கப்பட்ட வணிகர் நல வாரியம் தற்போது கூடுதலாக 9 அலுவல் சாரா உறுப்பினர்களுடன் விரிவுபடுத்தப்பட்டு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

84. மாநிலத்திற்குள் அமைத்திருந்த வணிகவரித் துறையைச் சார்ந்த 11 சோதனைச் சாவடிகளும் வேளாண்மைத் துறையைச் சார்ந்த 29 சோதனைச் சாவடிகளும் நடப்பு ஆண்டில் அகற்றப்பட்டன.

85. **மேலும் அறிவிக்கை செய்யப்பட்ட விளைபொருள்களில் ஆண்டொன்றிற்கு ரூபாய் 5 இலட்சம் வரை வணிகம் செய்கின்ற விவசாய விளைபொருள் சில்லரை வணிகர்களுக்கு உரிமம் பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும். இதனால் சுமார் 25,000–க்கும் மேற்பட்ட விவசாய விளைபொருள் சிறுவணிகர்கள் பயன்பெறுவார்கள். மேலும் 5 குதிரைத் திறன் (5 HP) வரை மோட்டார் இயந்திரத்தை நிறுவி கூலி அரவை செய்யும் ஆலைகளுக்கும் உரிமம் பெறுவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும்.**

## ***தொழிலாளர் நலன்***

86. 60 க்கு மேற்பட்ட பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனுக்காக "தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தை" இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே உள்ள கட்டிடத் தொழிலாளர்கள் நல வாரியம் அன்னியில் விவசாயத் தொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்கள், பனைமரத் தொழிலாளர்கள், ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள், முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள், காலணி தயாரிக்கும் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், தையல் தொழிலாளர்கள் மற்றும் ஓவியர்கள் ஆகிய அதிக எண்ணிக்கை கொண்ட சிலவகைத் தொழிலாளர்களுக்காக இந்த அரசு தனித்தனியாக நல வாரியங்களையும் அமைத்துள்ளது. இவைகளில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணம், திருமண உதவி, மகப்பேறு நலன், குழந்தைகளுக்கு படிப்பு உதவி ஆகியவற்றை இந்த வாரியங்கள் வழங்கும்.

87. மூடப்பட்ட தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு இந்த அரசு 1999–2000 ஆண்டு முதல் ஒவ்வொரு மாதமும் ரூபாய் 250 உதவித் தொகையாக வழங்கிவருகிறது. தற்போது

8081 தொழிலாளர்கள் இவ்வுதவித் தொகையைப் பெற்றுவருகிறார்கள். இஃதன்னியில் இவ்வகைத் தொழிலாளர்களுக்கு 1998லிருந்து ஒவ்வொரு ஆண்டும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தீபாவளிப் பண்டிகைக்காக வழங்கப்பட்டு வருவதைப்போல் நடப்பாண்டிலும் ரூபாய் 63 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## *வீட்டுவசதி*

88. 1996–97லிருந்து 2000–2001 வரையிலான காலஅளவில் 9 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. பயனடைந்தோரில் 3 இலட்சத்து மூவாயிரம் பேர் ஆதிதிராவிடர் வகுப்பையும், 10,794 பேர் பழங்குடியினர் வகுப்பையும், எஞ்சியுள்ளோர் ஏனைய வகுப்புகளையும் சேர்ந்தவர்களாவர்.

89. இந்த அரசின் புதிய திட்டங்களில் ஒன்றாக மாநகராட்சிப் பகுதிகளில் குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு கல்நார் தகடுகளாலான கூரை, சுவர் மற்றும் கதவுடன் கூடிய இலவச வீடுகள் அமைக்கும் பணி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு 31–3–2000 வரை ரூபாய் 26 கோடியே 50 இலட்சம் செலவில் 21,329 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் 26,000 குடும்பங்களுக்கு ரூபாய் 39 கோடி செலவில் வீடுகள் கட்டும்பணி விரைவில் முடிவடையும்.

90. காவல் துறை பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தரும் திட்டத்தின்கீழ் இந்த நாலரை ஆண்டுகளில் மொத்தம் ரூபாய் 348 கோடியே 19 இலட்சம் மதிப்பீட்டில் 12,102 குடியிருப்புகளை தமிழ்நாடு காவல்துறை வீட்டுவசதிக் கழகம் மூலம் கட்டித்தர ஆணையிடப்பட்டு, இதுவரை 10,111 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள குடியிருப்புகளைக் கட்டும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது.

## *மாவட்ட நிருவாகம்*

**91.** **1996**ல் இந்த அரசு பொறுப்பேற்றபின் தேனி, திருவள்ளூர், திருவாரூர், நாமக்கல் மற்றும் அரியலூர் ஆகிய ஐந்து புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. விழுப்புரம், திருவள்ளூர், தூத்துக்குடி, திருவண்ணாமலை, கரூர், நாமக்கல், தேனி, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய ஒன்பது மாவட்டங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்கள் ரூபாய் **60** கோடியே **54** இலட்சம் செலவில் இந்த நாலரை ஆண்டுகளில் கட்டி முடித்த சரித்திரச் சாதனையை இந்த அரசு புரிந்துள்ளது.

## *அரசுப் பணியாளர், ஆசிரியர் மற்றும் ஓய்வூதியதாரர் நலன்*

**92.** அரசுப் பணியாளர்களின் நலனைப் பேணிக் காப்பதில் இந்த அரசு எப்போதும் முனைப்பாக செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநாட்டில் கலந்துகொண்டு அறிவித்த முடிவுகளின் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு சி மற்றும் டி பிரிவைச் சார்ந்த அரசு ஊழியர்களுக்கான பொங்கல் ஊதியக்கொடை ரூபாய் **2500** என்ற வரம்பிற்குட்பட்டு ஒரு மாத சம்பளமாக உயர்த்தப்பட்டது.

**93.** அரசுப் பணியாளர்களின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேமநல மற்றும் பணிக்கொடை திட்டம் **2000** என்ற புதிய ஓய்வுக்காலப் பலன் திட்டத்தையும் இந்த அரசு தற்போது அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

## *ஆண்டுத் திட்டம்*

**94.** ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவை ஒவ்வோராண்டும் இம்மாநில அரசு தொடர்ந்து முழுவதுமாக பயன்படுத்தி வந்துள்ளது. நடப்பு நிதியாண்டிலும், ரூபாய் **5700** கோடி திட்ட ஒதுக்கீடு முழுமையாக பயன்படுத்தப்படும். **2001–2002** ஆம் ஆண்டு, ஒன்பதாம்

ஐந்தாண்டுத் திட்டக் கால அளவு முடிவடையும் ஆண்டாகும். இந்த ஆண்டிற்கான திட்ட அளவு பொதுத் தேர்தலுக்குப்பின் மத்திய திட்டக் குழுவுடன் கலந்தாலோசித்து முடிவு செய்யப்படும்.

## *நிதி நிலைமை*

95. நடப்பாண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை 2000 மார்ச் திங்களில் இப்பேரவையில் வைத்தபோது, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூபாய் 18,406 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூபாய் 21,565 கோடியாகவும் இருந்தது. 2000–2001 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூபாய் 18,396 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூபாய் 22,318 கோடியாகவும் ஆகியுள்ளது.

96. 2001–2002ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூபாய் 20,635 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூபாய் 24,294 கோடியாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

97. 1999–2000ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூபாய் 4,400 கோடியாக இருந்தது. திருத்த மதிப்பீடுகளில் இது, ரூபாய் 3,922 கோடியாகக் குறைந்துள்ளது. 2001–2002 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் அது, ரூபாய் 3,659 கோடியாக இருக்கும்.

98. நடப்பு நிதியாண்டில், திருத்த மதிப்பீடுகளில் அனைத்துக் கணக்குகளையும் பொறுத்தவரையில் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூபாய் 431 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. அது, நடப்பாண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் திட்டமிடப்பட்ட ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூபாய் 668 கோடியைவிடக் குறைவாகும். 2001–2002 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூபாய் 996 கோடி என்ற அளவில் மதிப்பிடப்பட்டுள்ளது. பதினோராவது நிதி ஆணையம் நமக்கு நியாயம்

வழங்கியிருந்தால் இந்த அளவு பற்றாக்குறை ஏற்பட்டு இருக்காது. எனவே நிதி ஆதாரத்தைப் பெருக்க எடுக்கும் முயற்சிகளில் ஒன்றாக மாநில அரசுக்கான ஊக்க உதவியை அதிகரித்துத் தரும்படி மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம்.

99. ஓர் இடைக்கால வரவு–செலவுத் திட்ட அறிக்கை எந்த வகையில் அமைய வேண்டுமென்ற வரையறைக்குட்பட்டு இந்த அறிக்கையை தயாரித்து அளித்துள்ளேன். நம்மிடையே எத்தகைய கருத்து வேறுபாடுகள் கொள்கை மாறுபாடுகள் இருப்பினும் அவைகளுக்கிடையிலேயும் இதுவரை இந்த ஐந்தாண்டுக்காலம் இந்த மாமன்றத்தில் கடைப்பிடித்து வரும் நட்பு கலந்த நல்லுறவுக்கு மேலும் ஆக்கமும் ஊக்கமும் வலிவும் வனப்பும் வழங்குகிற அளவுக்கு சீரிய கருத்துக்களை வழங்கிட வேண்டுமென்று தோழமையுணர்வுடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

100. இந்த வரவு–செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் மிகுந்த ஒத்துழைப்பை நல்கி பணியாற்றிய நிதித் துறைச் செயலர் திரு. ஆர்.சந்தானம், இ.ஆ.ப. அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***வணக்கம்***

**மு.கருணாநிதி,**
**முதலமைச்சர்.**

சென்னை
2001 ஆம் ஆண்டு
ஜனவரித் திங்கள் 29 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2032,
தைத் திங்கள் 16 ஆம் நாள்.